நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.90/2019
அரசு தரப்புக்காக அ.சா.10 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr. மதுவர்தனா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 18 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.36)

நான் தற்போது முண்டியம்பாக்கத்தில் உள்ள விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் முதுநிலை உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் அதே பணியில் இருந்தபோது கடந்த 12.07.2018 அன்று விருத்தாசலம் காவல் நிலைய குற்ற எண்.392/2018 என்ற குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த நபர் அம்சவள்ளி க.பெ.வேல்முருகன், 37 வயது என்பவரது பிரேதத்தை பரிசோதனை செய்து சான்று வழங்குமாறு விருத்தாசலம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை பெண் தலைமை காவலர் திருமதி.மணிமேகலை என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு அன்றைய தினமே பிற்பகல் 12.10 மணிக்கு மேற்படி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை தொடங்கினேன். மேற்படி காவலர் பிரேதத்தை அடையாளம் காட்ட அங்க மச்ச

அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டது. மேற்படி இறந்த நபரின் உடலில் முகம், தலை, உடலின் மேல் பகுதி மற்றும் 2 கைகள் ஆகியவைகளில் தீ காயங்கள் காணப்பட்டது.

வெளிப்புற பரிசோதனையில் 2 கண்களும் மூடி இருந்தது வாய் மூடி இருந்தது இயற்கை துவாரங்கள் இயல்பாக இருந்தது. உடலின் மேல் பகுதியில் தோல் ஆங்காங்கே தீ காயங்களுடன் உரிந்த நிலையில் காணப்பட்டது. தலைமுடி மற்றும் புருவங்கள் பொசுங்கிய நிலையில் காணப்பட்டது.

**<u>வெளிப்புற காயங்களில் விவரங்கள் பின்வருமாறு–</u>**

முகம், தலை, உடலின் மேல்பகுதி முன் பக்கம் மற்றும் பின் பக்கம் 2 கைகள் ஆகியவை ஆழமான தீ காயங்களுடனும் அதன் முனைகள் சிவப்பு நிறத்திலும், அதன் உட்பகுதியில் உள்ள தசைகளிலும் தீ காயங்கள் ஏற்பட்டு எரிந்த வண்ணமும் அதன் மேல் அடர்ந்த மஞ்சள் நிற சீழ் போன்ற படலத்துடனும் சரிவர ஆறாமலும் காணப்பட்டது.

இடுப்பிற்குக்கீழ் பகுதியிலும் 2 தொடைகளிலும் மற்றும் கால்களிலும் பாதங்களிலும் காயங்கள் இல்லாமல் காணப்பட்டது.

**<u>தலையின் உட்புற பரிசோதனையின்போது–</u>**

முடித்தோல், மண்டையோடு, மூளை உறை ஆகியவை இயல்பான நிலையிலும் மூளையானது வீங்கிய நிலையிலும் வெட்டுத்தோற்றத்தில் ரத்தம் தோய்ந்தும் மண்டையோட்டின் அடிப்பகுதி இயல்பான நிலையிலும் காணப்பட்டது.

**<u>கழுத்தின் உட்புற பரிசோதனையின்போது–</u>**

நாவடி மற்றும் குரல்வளை எலும்புகள் அதனை சுற்றியுள்ள தசைகள் மற்றும் ரத்தக்குழாய்கள் இயல்பான நிலையிலும் மூச்சுக்குழாய் மற்றும் உணவுக்குழாய் இயல்பான நிலையிலும் அந்நிய பொருட்கள் ஏதும் இல்லாமலும் காணப்பட்டது.

**<u>மார்பின் உட்புற பரிசோதனையின்போது–</u>**

நெஞ்சுக்கூடு எலும்புகள் இயல்பான நிலையில் காணப்பட்டது. நெஞ்சுக்குழி சுமார் 100 மில்லி லிட்டர் அளவிலான மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது.

**<u>நீதிமன்ற கேள்வி</u>** – நெஞ்சுப்பகுதியில் இதுபோன்ற திரவங்கள் எதனால் காணப்படுகிறது

**<u>பதில் –</u>** இந்த உடல் பகுதியில் தொற்று ஏற்படும் நிலையில் இந்த திரவங்கள் சுரந்து காணப்படும்.

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி–**</u>

இரண்டு நுரையீரல்களும் சுருங்கிய நிலையிலும் நெஞ்சின் உட்பகுதியில் ஒட்டிய நிலையிலும் வெட்டுத் தோற்றத்தில் மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது.

<u>**நீதிமன்ற கேள்வி**</u> – இரண்டு நுரையீரல்களும் சுருங்கிய நிலையில் நெஞ்சின் உட்பகுதியில் ஒட்டி காணப்படுவதற்கு காரணம் என்ன?

<u>**பதில் –**</u> உடலில் ஏதேனும் நோய் தொற்று ஏற்பட்டு அத்தொற்று நுரையீரலுக்கு பரவும்போது இத்ததைகய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த வழக்கில் உடலின் மேல் ஏற்பட்ட தீக்காயங்களின் விளைவாகவும் இந்த தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி–**</u>

இருதயம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள தமனிகள் இயல்பான நிலையில் காணப்பட்டது. இருதய அறைகள் காலியாகவும் ரத்தக்குழாய்கள், ரத்த நாளங்கள் இயல்பான நிலையில் காணப்பட்டது.

<u>**வயிற்றில் உட்புற பரிசோதனையின்போது**</u>

குடல் பகுதிகளில் சுமார் 200 மில்லி லிட்டர் அளவிலான மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது. இரைப்பையில் சுமார் 100 மில்லி லிட்டர் அளவிலான அடர் சிவப்பு நிற திரவம் பிரத்தியேக வாடை எதுவும் இல்லாமல் காணப்பட்டது. இரைப்பையின் உட்பகுதிகள் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. கல்லீரல், கணையம், சிறுநீரகம் ஆகியவை இயல்பாகவும் வெட்டுத் தோற்றத்தில் ரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. கர்ப்பப்பையின் அளவானது 7 x 5 x 2 cm ஆகவும் வெட்டுத் தோற்றத்தில் காலியாகவும் சிறுநீரகப் பை காலியாகவும் காணப்பட்டது.

இடுப்பு எலும்புகள் மற்றும் தண்டுவடம் இயல்பான நிலையில் காணப்பட்டது.

மேற்படி பிரேத பரிசோதனை பிற்பகல் 01.10 மணிக்கு முடிக்கப்பட்டது. உடலின் மீது காணப்பட்ட காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முன்பாகவே ஏற்பட்ட காயங்கள் ஆகும். சேகரம் செய்யப்பட்ட உடல் உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இறப்பிற்கான காரணம் நிறுத்தி வைக்கப்பட்டது. அவ்வாய்வகத்தின் அறிக்கையானது பெறப்பட்டது. அதில் ரத்தத்திலும் மற்றும் உடல் உள்ளுறுப்புகளிலும் சாராயமோ அல்லது வேறு எதுவும் நச்சுப்பொருளோ கண்டறியப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. மேற்படி பிரேத பரிசோதனை மற்றும் ரசாயன அறிக்கை ஆகியவையின் அடிப்படையில் இறந்த நபர் உடலின் மீது ஏற்பட்ட தீக்காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும்

என்று எனது இறுதி கருத்துரையை வழங்கினேன். (நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை 2 பக்கங்கள் கொண்டது என்னால் கையொப்பம் செய்யப்பட்ட உண்மை நகல் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது). (30.07.2018 தேதியிட்ட விழுப்புரம் தடய அறிவியல் ஆய்வகம் வழங்கிய உள்ளுறுப்பு பரிசோதனை முடிவு 2 பக்கங்கள் கொண்டது **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது). (24.08.2018 தேதியில் நான் வழங்கிய இறுதி கருத்துரை ஒரு பக்கம் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு நபர் தானகவே தலையில் எரிபொருளை ஊற்றி எரித்து கொண்டால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சம்பவம் நடைபெற்று 15 நாட்கள் கழித்துதான் அம்சவள்ளி இறந்துள்ளார் என்பதால் இந்த 15 நாட்கள் இடைப்பட்ட காலத்தில் சரியாக மருத்துவ உதவி செய்யாமலும் தண்ணீர் குடித்திருந்தாலும் ஏதேனும் தொற்று ஏற்பட்டிருந்தாலும் இறப்பதற்கு வாய்ப்புள்ளதா என்றால் இந்த நபருக்கு நான் சிகிச்சை அளிக்கவில்லை என்பதால் அதுபற்றி என்னால் கூறஇயலாது.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.07)

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.